# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2026 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க,
## பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டம்

---

**[2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2026, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 5, அரசாங்க ெவளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2026 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க,**
**பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டம்**

[2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ 31/2025

**தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டத்தினை நீக்குவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்

1. இச்சட்டம் 2026 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பாராளுமன்ற ஓய்வூதியம் (நீக்குதல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சட்டத் தினை நீக்குதல்

2. தேசிய அரசுப் பேரவையினது 1977 ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

ஐயத்தை தவிர்த்தல்

3. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளு மன்ற ஓய்வூதியச் சட்டத்தின், 1982 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு அல்லது 1990 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஓய்வூதியமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவரானவரும் மற்றும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னதாக மேலே சொல்லப்பட்ட ஏற்பாடுகளின்கீழ் ஓய்வூதியமொன்றைப் பெற்றுக்கொள்கின்றவருமான எவரேனும் ஆள் இச்சட்டம் தொடங்கும் தேதியன்றும் அதன்பின்னரும் அத்தகைய ஓய்வூதியத்தைப் பெறாதொழிந்தவராதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

PL 15606 - 588(2026/01)